உ
சிவமயம்



செங்குந்த வீதியைச் சேர்ந்த

அமரர் திருமதி

# அருளம்பலம் முத்தம்மா

அவர்களினது

சிவபதப் பேறு குறித்த

# முத்து மலர்

04.08.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம் குடும்பத்தின் தலைவியாய்
வாழ்ந்து எம்மை எல்லாம்
அன்போடும் பாசத்துடனும் பேணிப்
பாதுகாத்து எமக்கு நல்வழி
காட்டி இறுதியாய் கொடிய
பக்கவாத நோய்க்கு ஆளாகி எமை
பரிதவிக்க விட்டு விட்டு தெய்வத்துடன்
இரண்டறக் கலந்து விட்ட எம்
அன்புத்தாயின் ஆத்மா சாந்தியை
பிரார்த்தித்து இம் மலரை
அவரின் பாதக் கமலத்தில்
காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்
1921
06
18

மறைவு
2004
07
19

அமரர் திருமதி **அருளம்பலம் முத்தம்மா**

அவர்கள்

## திதி வெண்பா

**தாரணி வருடத்து ஆடி வளர்பிறையின்**
**சீருடைய துதியை திதி அதனை - நல்லவராய்**
**ஊரறிந்த உயர்ந்த மன முத்தம்மா பரமனடி**
**சேரவேன தேர்ந்தாரறி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## கணபதி காயத்திரி மந்திரம்

ஓம் தத் புருஷாய வித்மஹே
ஏக தந்தாய வித்மஹே
வக்ர துண்டாய தீமகி ப்ரசோதயாத்

## காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவஸ் ஸுவ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோதந ப்ரசோதயாத்:

# தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

ஏண்ணுகோன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பொருமான் திருவடியை எண்ணிளெல்லாம்
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஓண்ணுளே யொன்பர் வாசல் வைத்தா
யொக்க வடைக்கும் போதுணரமாட்டேன்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை
மதிப்பவர்மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவஞ் சிவனைத்
திருவீழிமிழை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட
பாற்கடல் ஈர்ந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்குச் மந்தனர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறாவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னைபென்றும்
மறவாமை வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியில் கீழிருக்க வென்றார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனை பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தானா மாறினைப் பெரு வாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
ஊத்தமா தான மற்குண நோயா
ஓப்பிலா மாமணி கிரிவாசா
வித்தகா ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குகஉலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்



சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செய்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்றுவந்து
வரவரவேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைநதெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொழி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத்(து) அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலிமுழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனையாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லா லீலா லீலாவினோதனென்று
ஊன்திருவடியை உறுதியென்றெண்ணும்
ஏன் தலை வைத்துன் இணையடி காக்க
ஏன்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க
புன்னிருவிழியால் பாலனைக்காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப்புனிதவேல் காக்க
கதிர் வேண்டும் கண்ணினைக் காக்க
விழி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப்பெரு வேல்காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்திருபல் முனைவேல்காக்க
சேப்பிய நாவைச்செவ்வேல்காக்க
குன்ன மிரண்டும் கதிர் வேல் காக்க
ஏன்னிளங்களுத்தைப் இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல்காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல்காக்க
வெற்றிவேல் வயிற்றைக் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில் வேல் காக்க
புட்ட மிரட்டும் பெருவேல் காக்க
வுட்டக் குதத்தை வல்வேல் காக்க
புணைத்டதொடை யிரண்டும் ாருவேல் காக்க
குணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவிற்சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக்கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
ஏப்பொழுதும் எனைஎதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிர வேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் கபக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர் வேல் காக்க
தூமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும் பகை அகல
வல்லபூதம் வலரட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பெண்கனைத்தொடரும்பிரமராய்க் கதறும்
பிள்ளைக டின்னும் புளைக்களட முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரசிகட் டேரி இத்துன்பசேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுப பேய்களுமம்
தண்டியக்காரரும் சண்டாளரும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனைமயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும்மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையிற்புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச்செருக்கும்
காசும்பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப்போக்கும்
ஆடியனைக்கண்டால் அலைந்து குலைந்திட
முாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
குாலதூா தாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்லறி மதி கெட்டோட
படியினில் முட்டப்பாசக் கயிற்றால்
கட்டுஉடல் அங்கம்கதறிடக்கட்டு
கட்டு உருட்டு கால்கை முடுறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதிங்கிட
சேக்கு சேக்கு செதில் செதிலாக
சோக்கு சோக்கு சூர்ப்பனகைச் சோக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
புற்று புற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலா வெண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் நரியும் இனிதி தொடர்ந்தோட
தேளும் பாம்பும் சேயோன்பூரான்
குடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறியவிசங்கள் எளிதில் இறஞ்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சத்தியம் வலிப்புப்பித்தம்
சூலைசயங் குன்மமசொக்குச்சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்லிப்பிரிதி
புக்கப் பிழவைக் படாட தொடை வாழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுவன் படுவன் கைதடதாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப்பிணியும் என்றனைக்கண்டால்
நில்லாதோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறுவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
முண்ணாள் அரசரும் மகிள்ந்துறவாகவும்
ஊன்னைத்துதிக்க உன்றிரு நாமம்
சுரவண பவனே திகளொளி பவ னே
புரிபுர பவனேபவமொளி பவனே
அரிதிரு மருகா அமராகதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறைவிடுத்தாய்
கந்தா!குகனே! கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா! குடம்பா கடம்பனை
இடும்பனையளழித்த இனிய வேல் முருகா
தணிகாசலனே சங்கரன்புல்வா
கதிர்காமத் துறை கதிர் வேல்முரகா
பழனி பதிவாழ் பாலகுமார!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
சேந்தின் மாமயுைறும் செங்கல்வ ராயா!
சுமரா புரிவாழ் சண்முகத்தரசே
குாரார் குழலாள் கலை மகன் நன்றாய்
ஏன்நா இருக்க யானுபைப்பாட
ஏன்னைதெடர்ந்த திருக்கும் எந்த முரகனை
பாடினேன் ஆடினேன் பரவசமாக!
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
தேசமுடன்யான் ெற்றியில் அணியப்
புாவினைகள் பற்றது நீங்கி
ஊனபதம் பெறவே உன்னருளாக
ஆன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மேத்தமெத் தாக லோயுதனர்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலேன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்கமலைக்குற மக்ளுடன்
வாழ்க வாழ்க வாரணததுவசன்
வாழ்க வாழ்க வறுமைகள் நீங்க
எத்தனை பிளைகன் டித்தனை குறைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையன்பாய் பிரிளமளித்து
மைந்தன் என் மீது என் மனமகிழ்ந்தருளி
தஞ்சம்என்றடியார் தளைத்திட அரள்செய்
கந்தசஸ்டி கவசம் விரும்பிய
பாலன்தேவராயன் பகர்ந்ததை
காலையில்மாலையில் கருத்துடன் நாளும்
ஆசார த்துடன் அங்கத்துலக்கி
நேசமுடன் ஒருநினைவது வாகி
குந்தஷஸ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
உரு நாள் முப்பத்தாறுகெண்டு
ஓதிநே செவித்து உகந்துநீர்றணிய
ஆதிஸ்டக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைசொல் ரெண்மர் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நம்மை யளித்துடும்
நவமத னெவும் நல்லெளி பேறுவர்
எந்தநாளுமீ ரெட்டய் வாழ்வர்
கந்தர் கை வெலாம் கவசத்தடியை
வள்யாய்க்காண மெய்யாய் வழங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பெடிப்யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனல் உள்ளம் அஷ்டலக்சுமிகளில்
விரலடசுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவை துணிந்த கையதனால்
இருபத்தேள்வருக்கு உவந்தமுதளித்த
குருபரன் பழனிக்குன்றில் இருக்கும்
சின்க்குழந்தை சேவடி போற்றி
எனைதடுத்தாட்கெள்ள என்றதன உள்ளம்
மேவிய வடிசுறும் வேலவபோற்றி
வேர்கள்சேனாபதியேபேற்றி
குறமக் மனமகிழ் கோனே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே யுடுத்பா போற்றி
கடம்பாபோற்றி கந்தா போற்றி
டெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்டமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிறைந்த அன்புத்தாயின் வாழ்க்கை வரலாறு

சீர் புகழ் வேளாதோப்பு இருபாலையில் இல்லறமே நல்லறமாக மேற்கொண்டிருந்த முருகேசு வள்ளியம்மை தம்பதிகட்கு இரண்டாவது புத்திரியாக முத்தம்மா என்ற முத்து வந்திருந்தார். முத்தசகோதரியாக அமரர் பொன்னம்மாவும் இளைய சகோதரிகளாக அமரர் கனகம்மா மற்றும் இராசம்மா என்பவர்கள் வந்துதித் தார்கள். மணப்பருவம் அடைந்ததும் செங்குந்தா வீதி திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த திரு. வைத்திலிங்கம் அருளம்பலம் என்பவரை மணம் புரிந்து நல் இல்லறத்தின் பயனாய் முத்தான ஐந்து பிள்ளைகளாக

மூத்தவர் சண்முகராசாவும் அடுத்ததாக தணிகாசல மூர்த்தியும் பின்பு கமலராசாவும் இவர்களைத் தொடர்ந்து ஆசைக்கொரு புத்திரியாக பதுமநாயகியும் கடைக் குட்டியாக யோகரட்ணமும் வந்துதித்தார்கள். அந்த ஐந்து பேருக்கும் முறையே நல்லம்மா, பிரான்சிஸ்கம்மா, குமுதினி, கந்தையா, சுசிலா(சாந்தி) ஆகிய நற்குணம் உள்ளோரை மணம் முடித்து வைத்து அக மகிழ்ந்து அவர்களின் பிள்ளைகளான சணமுகரஜனி, அருள் ரஜனி, மேரிகனிஸ்ரலா,றீகன், ஜீன், பத்மரூபன், மீரா, பத்மபிரியா, சிறிஜெயராம்,சசிரேகா,சர்மிளா, விதுர்ஷிகா என்பவர்களை கண்டுகளித்ததுடன் சுலோசன், டஷ்மின், என்பவர்களைப் பூட்டப்பிள்ளைகளாகப் பெற்று அக மகிழ்ந்து வாழ்ந்து கெண்டிருந்தார்.

அவர் தான் பெற்ற பிள்ளைகள் மீது எவ்வாறு அன்பு கொண்டிருந்தாரோ அதைவிட மேலாக தன் உடன் பிறப்புக்கள் மீது அவர்கள் பெற்ற பிள்ளைகள் மீதும் அன்பு வைத்து அரவணைத்து வாழ்ந்து வந்தார். தன் வீடு தேடி வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று தாகம் தீர்த்து அனுப்பிவைப்பதனால் "தேனீர் அம்மம்மா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் செல்லமாக அழைக்கப்பட்டார். தன் சகோதரி இல்லாத இடத்து தன் சரோதரிகள் வீட்டில் நடந்த நன்மை தீமைகளிலெல்லாம் தானே முன்னின்று நடத்தினார்.

இவரின் பேரப்பிள்ளைகளில் இருவரான சண்முகரஜனி, அருள்ரஜனி என்பவர்கள் தூரதேசமான கனடாவில் வாழ்ந்த போதிலும் தம்மை வளர்த்து ஆளாக்கிய தமது அப்பம்மாவையே தமது பெற்றோர்களைவிட மேலாக நேசிக்கும் பாக்கியம் பெற்றார். இவர் நோய் வாய்ப்பட்டு சுமார் ஓராண்டு காலம் படுத்த படுக்கையாய் இருந்த தனது அன்பு கணவரை எவ்விதமான அருவருப்பும் இல்லாமல் பராமரித்தான் பலனோ

என்னமோ இவர் நோய்வய் பட்டிருந்தபோது இவரின் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள் என்பவர்கள் நல்ல முறையில் கவனித்தார்கள். இவர் 1985ம் ஆண்டு தனது அன்பு கணவர் காலமானதன் பின்னர் தமது பிள்ளைகளின் நற்பராமரிப்பில் சுகதேகியாக வாழ்ந்து கொடிய நோயின் தாக்கத்துக்கு உட்பட்டு சுமார் 40 நாட்கள் படுத்தபடுக்கையாய் இருந்து 19.07.2004 அன்று எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களைச் சென்றடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா என்னும் ஒரு இமயம்

“அம்மா” என்பது வெறும் மூன்று எழுத்து சொல்லாக இருந்தாலும் அதன் அர்த்தம் அளப்பரியது. அம்மா இல்லாமல் இப்பூவுலகில் எந்த உயிர் இனங்களும் இல்லை என்றாலும் எல்லோருக்கும் அம்மா “அம்மா”வாக வாய்ப்பதில்லை. சிலருக்கு அந்த அம்மா வெறும் சும்மாதான் ஆனால் எமக்கு வாய்த்தது அம்மா அல்ல அதற்கும் மேலாக அவள் ஒரு தெய்வம்.

இந்த முத்தான அம்மா “முத்தம்மா”தான் பெற்ற பிள்ளைகள் மீதும் அப்பிள்ளைகள் பெற்ற பிள்ளைகள் மீதும் தன் உடன் பிறப்புக்கள் பெற்ற பிள்ளைகள் மீதும் அப்பிள்ளைகள் பெற்ற பிள்ளைகள் மீதும் அளப்பரிய அன்பு செலுத்தி அவர் தம் வாழ்வில் அக்கறை கொண்டு அவர்கள் எல்லோரும் வாழ்வில் அக்கறை கொண்டு அவர்கள் எல்லோரும் வாழ்வில் நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று தினம் தினம் ஆசைப்பட்டவர்.குடும்பம் என்றால் மாமி மருமகள் பிரச்சனை நிச்சயம் தலை தூக்கும். ஆனால் இந்த மாமியோ “நான் மாமி” என்ற மமதையால் எந்த மருமகள் மீதும் ஆதிக்கம் செலுத்தியது இல்லை மாறாக அவர்கள்தான் பெற்ற பிள்ளைகள் என நினைத்து அரவணைத்து வாழ்ந்தவர்.

“**முத்தம்மா**” என்றால் இங்கு தெரியாதவர்கள் யாரும் இல்லை. அவர் தன் பெயருக்கு ஏற்றால் போல் அப்பெயருக்கு களங்கம் ஏற்படாமல் அடுத்தவர் மீது பொறாமை கொள்ளாமல் அடுத்தவர் மனம் நோகப் பேசாமல் எல்லோரும் தன் உறவினர்கள் என்ற நினைப்புடன் சுமார் 83ஆண்டுகள் வெள்ளை வினாயகர், சட்டநாத சிவன், நல்லூர்க்கந்தன் ஆகிய தெய்வங்களை இடைவிடாமல் வழிபட்டு சுகதேகியாக வாழ்ந்து இறுதியில் சில நாட்கள் பக்கவாத நோயால் அவஸ்தைப்பட்டு தான் செய்த புண்ணியத்தின் பலனோ என்னவோ இப்பூவுலகில் வாழ்ந்தது போதும் என நினைத்து கண்களை மூடிக்கொண்டார். அவர் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று அவர் வழிபட்ட தெய்வங்களை வேண்டிக் கொள்கின்றோம்.

*– பிள்ளைகள் –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படித்தான் மனம் வந்ததோ

பகலில் எமக்கெல்லாம் ஒளி தரும் சூரியனாய்
இருந்ததும்

இரவில் திசைகளை கூறும் நட்சத்திரங்களாய்
இருந்ததும்
நீ தானே மாமி!

நாங்கள் செய்வதறியாது தடுமாறிய போதெல்லாம்
எமக்கு நல்வழி காட்டியதும் நீதானே மாமி

எம்செல்வங்கள் எல்லோரையும் உன் செல்வங்கள்
எனக் கருதி தாலாட்டி

சீராட்டி வளர்த்து ஆளாக்கினமையை நாம் மறந்து
விடலாமோ மாமி

உன்னைப் போன்றதொரு மாமி யாருக்கும் எளிதில்
கிடைப்பது இல்லை அந்த வகையில்

நாம் கொடுத்து வைத்தவர்கள் தான் எம்மை விட்டு

செல்ல உனக்கு எப்படித்தான் மனம் வந்ததோ?

– மருமக்கள் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மா என்று ஒரு............

அம்மம்மா என்று ஒரு மலை, அது சாய்ந்து விட்டது
அதனால் பாதுகாப்பின்றி தவிக்கின்றோம்.

அம்மம்மா என்று ஒரு ஆழி அது வற்றிவிட்டது
அதனால் மீதிப்பயணம் பண்ண முடியாமல்
தவிக்கிறோம்.

அம்மம்மா என்று ஒரு சூரியன், அது மறைந்து விட்டது
அதனால் விழி இழந்து தவிக்கிறோம்

அம்மம்மா என்று ஒரு ஆகாயம், அது சுருங்கிவிட்டது
அதனால் மூச்சுத்திணறி துடிக்கின்றோம்

அம்மம்மா என்று ஒரு திசை காட்டிமரம், அது
வீழ்ந்துவிட்டதுஅதனால் திசை புரியாமல் தவிக்கின்றோம்

அம்மம்மா என்று ஒரு ஆலமரம் அது முறிந்துவிட்டது
அதனால் அரவணைக்க ஆள் இன்றி தவிக்கிறோம்

அம்மம்மா என்று ஒரு தென்றல்அது வீசமறுத்து விட்டது
அதனால் நாம் மனம் புழுங்கி தவிகின்றோம்

எமக்கு இனி, பாதுகாப்பாய் ஒளியாய் நல்வழி
காட்டியாய்
நிழல் தந்து எம்மை காக்கும் மரமாய் இருக்கப்
போவது யார்?

உன் பிரிவினால் துயரும்

**- பேரப்பிள்ளைகள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிறைந்த அன்புத்தாயே

எம் மனதில் நிறைந்து நிற்கும்
எமது அன்புப் பெரியம்மாவே
எமது அருமை குஞ்சியம்மாவே
தன் பிள்ளைகளைப் போன்று
தன்சகோதரங்களின் பிள்ளைகளையும்
நேசித்து வளர்த்த அன்புத்தாயே
உன் அன்பையும் உன் நேசத்தை
நாம் எப்படி மறப்போம்.

எமது தாயார் எமதருகில் இல்லாது
இருந்தபோது தாயிற்கு தாயாக
எம் அருகில் நின்று நீ புரிந்த
கடமை தனை நாம் மறக்கத்தான் முடியுமா?
திடீரென்று நீ நோய்வாய்ப்பட்ட போது
நாம் ஓடோடி வந்தோம் உன்னை
சுகதேகியாக்கி மீண்டும் பழைய நிலைக்கு
கொண்டு வர வேண்டும் என்று
ஆனால் அந்த காலன் உன்னை பறித்துச்
சென்று விட்டானே உன்னைப்போன்ற
தொரு அம்மாவை நாம் இனி எங்கு
காணப்போகின்றோம்.தினமும் தோத்திரங்கள்
பாடிப்பாடியே இறைவனடி சேர்ந்த உங்கள்
ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கிறோம்.

**- பெறாமக்கள் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு போதும் உன் நினைவு நெஞ்சை விட்டு மறையாது

நாலு சகோதரமாய் நாம் கூடிப்பிறந்து ஓடிவிளையாடி மகிழ்ந்த நாட்கள் மனக்கண்ணுள் தெரிகின்றது.
பாசமுடனும் பரிவுடனும் என் பிள்ளைகளை
உன் பிள்ளை போல் அரவணைத்து ஆறுதல் கொடுத்த அக்காவே! அன்பான அமைதியான உன் உருவம் ஒரு போதும் நெஞ்சை விட்டு மறையாது

"சகோதரி"

**சாந்தி ! சாந்தி ! சாந்தி !**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரை பேணுதல்

எமது சமூக அமைப்பில் முக்கியமான பங்கை வகிப்பவர்கள் முதியவர்கள் ஆவர். அத்தகைய முதியவர்களை மதித்தல் அவர்கள் மனம் புண்படாமல் பேணுதல் என்பன எமது சமூகத்தில் தற்சமயம் அருகிக்கொண்டு வருகின்றன. இளம் தலைமுறையினருக்கு நல்ல வழிகாட்டியாக இருந்த முதியோர்கள் பலர் கவனிக்க ஆட்கள் இன்றி வீதிக்கு வீதி அலைந்து திரிவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. இந்நிலை ஏற்படக் காரணம் என்ன? இதற்கு யார் பொறுப்பு ஏற்கப் போகின்றார்கள்?

எமது நாட்டில் கடந்த சில தசாப்தங்களாக நிகழ்ந்து கொண்டிருந்த யுத்தம் முதியோர்களின் இந்நிலைக்கு முக்கிய காரணமாய் இருந்தது. யுத்தத்தின் காரணத்தால் பல இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் தப்பிப்பிழைத்த வசதி படைத்த இளைஞர்கள் பல்வேறு மேலைத்தேசங் களில் தஞ்சம் அடைந்து தமது காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்களில் கருணையுள்ளம் கொண்ட சிலர் தமது பெற்றோர்களை தம்முடன் அழைத்து வைத்து பராமரிக்கின்றார்கள். வேறுசிலர் ஊரில் இருக்கும் பெற்றோர்கட்கு பணம் மட்டும் அனுப்பிவிட்டு பேசாமல் இருந்து விடுகிறார்கள். இன்னும் தமது பெற்றோர்களை நேரில் சென்று பார்க்க முடியவில்லை என்ற ஏக்கத்துடன் தமது காலத்தை கழித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

பணம் மட்டும் முதியோர்கட்கு ஆறுதல் கொடுக்கக் கூடிய விடயமல்ல. அவர்கள் அருகில் உட்கார்ந்திருந்து ஆறுதலாக சில வார்த்தைகள் பேசினாலே போதும் அவர்கள் மனம் திருப்திப்பட்டுக்கொள்கின்றார்கள். இத்தகைய நிலை பல முதியவர்கட்கு கிடைப்பதில்லை. அவர்கள் தனிமையில் இருந்து வாடுவதை காணக்கூடியதாக உள்ளது.

எமது நாட்டு சமூக அமைப்பில் ஆண்கள் திருமணத்திற்குப் பின்பு தமது மனைவி வீட்டில் அதாவது அவர்கட்கு சீதனமாக வழங்கப்பட்ட வீட்டில் குடியிருக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விடுவார்கள். அவர்கள் வீட்டில் பொற்றோர்கள் கவனிக்க ஆட்கள் இன்றி வாடக் கூடிய நிலையும் ஏற்பட வாய்ப்புண்டு. சிலர் திருமணம் முடிந்த பின்பு தமது மனைவியின் சொல்லுக்கு கட்டுப்பட்டு தமது பெற்றோர்களை நடுத்தெருவில் விட்டுவிட்டு வருகின்றார்கள். ஒரு சிலர் மட்டும் தனியாக வீடு எடுத்து தமது பெற்றோர்களை தம்முடன் வைத்து பராமரிக்கின்றனர்.

மேலைத்தேசங்களில் நிலமை மாறுபட்டதாக காணப்படுகின்றது. அங்கு குறிப்பிட்ட ஓர் வயதின் பின் இளைஞர்கள் தனித்து வாழப்போய் விடுகின்றார்கள். ஆகவே கவனிக்க ஆட்கள் அற்ற பெற்றோர்கள் முதியோர் இல்லங்களை நாடிச் செல்கின்றார்கள். அவர்கள் அங்கு பராமரிப்பாளர்களால் அவர்கள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றார்கள். எமது நாட்டிலும் ஆதரவற்ற பெற்றோர்களை பராமரிக்க முதியோர் இல்லங்கள் சில இருந்தும் அவை பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருப் பதைக் காணலாம்.

"எமது நாட்டில் உள்ள முதியோர்கள் பிரச்சனைக்கு தீர்வு காணுவது இளம் தலை முறையினரின் கையில் தான் உண்டு. "தாய் தந்தையை பேண்" என்ற முதுமொழிக்கு இணங்க ஒவ்வொரு இளைஞர்களும் தமது பெற்றோர்களை நல்ல முறையில் கவனிப்போம் என்று திட சங்கற்பம் பூண்டால் முதியோர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமையும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் விவேகச் சிந்தனைகள்

- முதல் நியாயத்திற்கு கீழ்ப்பணிய கற்றுக்கொள்ளுங்கள் கட்டளையிடும் அதிகாரம் உங்களுக்கு தானாக வரும்

- நம்முடைய முதல் வேலை நம்மை நாம் வெறுக்காமல் இருப்பதுதான். நாம் முன்னேற வேண்டுமானால் முதலில் நம்மிடம் நம்பிக்கை வேண்டும். பிறகு கடவுளிடம் நம்பிக்கை வேண்டும்.

- இல்லறத்தானின் முதற் கடமை குடும்பம் நடத்துவதற்காகப் பணம் தேடுவதில் ஈடுபடுவதாகும் ஆனால் பொய் சொல்லுதல் மூலமாகவோ கொள்ளையடிப்பதன் மூலமாகவோ பணம் தேடாமல் இருக்கவேண்டும்.

- ஆன்மீக உதவிக்கு அடுத்த சிறந்த உதவி அறிவால் செய்யப்படும் உதவியாகும் அறிவுதான் வாழ்வு அறியாமையே மரணம் அறிவு எனும் ஒளிபிரகாசித்தால் அறியாமை எனும் இருள் விலகிவிடும்

- பிறரது குற்றங்களைப் பற்றி ஒரு போதும் பேசாதே ஒருவனுடைய குற்றங்களைப் பற்றி பேசுவதனால் ஒரு போதும் நீ அவனுக்கு உதவிசெய்தவனாக மாட்டாய்

- ஒவ்வொரு மனுசனும் தனக்கென்று ஓர் இலட்சியத்தை வைத்துக் கொள்ள வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயர்ந்த இலட்சியமுள்ள ஒருவனால் ஆயிரம் தவறுகள் செய்தால் இலட்சியம் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதினாயிரம் தவறுகள் செய்வான்

- ஒரு மனிதனின் உண்மையான குணத்தை அறிய விரும்பினால் அந்த மனிதனின் செய்கின்ற மிகச்சாதாரண செயூல்களை கவனியுங்கள் எந்த சூழ் நிலையிலும் எந்தக் காலத்திலும் யாருடைய குணம் உயர்ந்ததாக இருக்கிறதோ அவனே உண்மையில் சிறந்தவன்

- இன்பமும் துன்பமும் பெரிய ஆசிரியர்கள் இன்பமும் துன்பமும் மனித ஆன்மாவைக்கடந்து செல்லும் போது ஆன்மாவின் மேல் பல வகையான அனுபவங்களை பதிந்து செல்கின்றன மனிதனிடன் அமையும் இந்த அனுபவங்களை ஒட்டு மொத்தமான பதிவுகளே குணம் என்று அழைக்கப்படுகின்றன.

- பலமே வாழ்வு பல மின்மையே மரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது சகதோழர் திரு.அ.யோகரட்ணம்
(நல்லூர் பல நோ. கூ. சங்கப் பணியாளர்)
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி அருளம்பலம் முத்தம்மா

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
கிளை - நல்லூர் பல நோ.கூ.சங்கம்.

(34313)(26-13-19)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியர் திரு.அ.கமலராஜா
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி அருளம்பலம் முத்தம்மா அவர்கள்

19.07.2004 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்திக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
பெற்றோர்கள், மாணவர்கள்,
யா/கோப்பாய் மகாவித்தியாலயம்

(34307)(36-13-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

உதயம்

[illegible]



அஸ்தமனம்

[illegible]

அமரர்

## திருமதி. அருளம்பலம் முத்தம்மா

நீ இவ்வுலகில் வாழுங்காலத்தில் மாண்புடனே வாழ்ந்தாய்
நற் செல்வங்களைப் பெற்று பாசமுடன் வளர்த்தாய்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மேல் நீ கொண்ட பாசம்
உறவுகளுக்கென்ன ஊருக்கே தெரியும் அம்மா.
அகவை எண்பது தாண்டியும் உன் சுறுசுறுப்பு மாறவில்லை
உன் சிந்தனைகளும், எண்ணங்களும் போற்றத்தக்க
மாசுபடா வாழ்க்கையை வாழ்ந்து காட்டினாய்.
பிறப்பவர் ஒரு நாள் மடிவது திண்ணம்
இது ஆண்டவன் இட்ட கட்டளை
நீயும் அவ்வழி சென்றது ஆண்டவனின்
விருப்பம் அல்லவோ, அதுவே உண்மை.

**அன்னாரைப் பிரிந்து தவிக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

கோவில் வீதி,
கல்லியங்காடு.

**மிக்கேல்பிள்ளை**
**குடும்பத்தினர்.**

**முல்லை அச்சகம்**, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
1921
06
18

மறைவு
2004
07
19

எமது நிறுவனத்தின் ஊழியர் திரு அ.தணிகாசலமூர்த்தியின் அன்புத்தாயார்

## அமரர்

## திருமதி அருளம்பலம் முத்தும்மா

அவர்கள்

சிவபதமடைந்ததையிட்டு

அன்னாரின் குடும்பத்தினருக்கு

எமது ஆழ்ந்த அனுதாபத்தை

தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சட்டநாதர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
20.07.2004

பிரிவால், துயருறும்
K.T.And Co
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி மறப்போம் எம் அன்னையை நாம்

நாம் பிறந்த நாள் முதலாக
எம் நலமே தன் நலமாய்
எமை அன்போடு அரவணைத்து
அரிய பல புத்திமதிகள் சொல்லி
எமக்கெல்லாம் நல் வழிகாட்டியாய்
எமை வளர்த்து ஆளாக்கி
வளமான வாழ்வு எமக்குத் தந்து
வளமுடனே எமக்குதவி
அமைதி வழி நின்று
அமைதியாய் இறைவனடி சேர்ந்த
உங்கள் பாசத்தை அன்பை
எப்படி நாம் மறப்போம் அம்மா?

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும் அவ்வேளையில்
உங்கள் மறைவு கேட்டு
ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்து
இறுதி அஞ்சலி செலுத்தி
இறுதி வரையிலும் நின்று
எம் துக்கம் தம் துக்கம் என நினைத்து
பல வழிகளிலும் எமக்குதவிய அன்பு உள்ளங்களிற்கும்
நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில்
வைத்தியம் பார்த்த வைத்தியர்களுக்கும்
தந்தி மூலமும் தொலைபேசி மூலமும்
பகிர்ந்து கொண்டவர்களுக்கும்
எம் நன்றிகள் என்றென்றும்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

## முருகேசு வள்ளியம்மை

- பொன்னம்மா (அமரர்) + ஆறுமுகம் (அமரர்)
- முத்தம்மா (அமரர்) + அருளம்பலம் (அமரர்)
  - சண்முகராசா (கனடா) + நல்லம்மா (கனடா)
    - சண்முகரஜனி (கனடா) + தங்கராசா (கனடா)
      - சுலோசனா
      - டஷ்மின்
    - அருள்ரஜனி (கனடா) + சாந்தகுமார் (கனடா)
  - தணிகாசலமூர்த்தி + பிரான்சிங்கம்மா
    - கனிஸ்ரலா
    - நீகன்
    - ஜீன்
  - கமலராசா + குமுதினி
    - பத்மரூபன்
    - மீரா
    - பத்மபிரியா
    - சிற… ஜெ…
  - பது… + கந்…
- கனகம்மா (அமரர்) + சுந்தரம் (அமரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதையின் சாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்.
எதை நீ கொண்டுவந்தாய், அதை இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாராம்சமுமாகும்

- கீதையில் கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org